இந்தியா, சவுதி, ஐரோப்பிய யூனியன், அமெரிக்காவை இணைக்கும்

'புதிய வர்த்தக பாதை' திட்டத்தின் செயல்திட்டம் எப்படி இருக்கும்?

சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு'–க்கு மாற்று என்பதால் எதிர்பார்ப்பு

புதிய வர்த்தக பாதை திட்டத்தின் வரைபடம். அடுத்தபடம்: சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தின் வரைபடம்.

புதுடெல்லி, செப். 13- இந்தியா, சவுதி அரேபியா, ஐரோப்பிய யூனியன், அமெரிக்காவை இணைக்கும் 'புதிய வர்த்தக பாதை' திட்டத்தின் செயல்திட்டம் எப்படி இருக்கும்? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ள நிலையில், இத்திட்டம் சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்திற்கு மாற்றாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் இந்தியா, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளை இணைக்கும் 'புதிய வர்த்தக பாதை' என்ற மெகா திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இத்திட்டத்திற்கு இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் (ஐஎம்இசி) என்று பெயரிட்டுள்ளனர். இந்த ஒப்பந்தத்தில் இந்தியா, அமெரிக்கா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐரோப்பிய யூனியன், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. இந்த புதிய வர்த்தக பாதை திட்டம் குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில், 'புதிய வர்த்தக பாதையானது, உலக மனித முயற்சி மற்றும் ஒற்றுமைக்கு சாட்சியாக அமையும்' என்று கூறியுள்ளார்.

இந்த வழித்தடத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்று நடைமுறைக்கு வருமானால், இந்தியா - ஐரோப்பா நாடுகளை ரயில், கப்பல் மூலம் இணைக்க முடியும். இந்த புதிய வர்த்தக பாதையானது, சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' முயற்சிக்கு மாற்றாக இருக்கும் என்கின்றனர். இவ்வளவு பெரிய திட்டம் குறித்த பின்னணி தகவல்கள் தற்போது வெளியாகி வருகின்றன. அதாவது இந்தியா, மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளுக்கு இடையேயான இந்த ஒப்பந்தம் மிகப்பெரிய உள்கட்டமைப்புத் திட்டமாகும். இந்த திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்த புள்ளி விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. ஆனால் இதற்காக 20 பில்லியன் டாலர்கள் (ரூ.1,65,791 லட்சம் கோடி) செலவிடப்படலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், துறைமுகங்கள் முதல் ரயில் நெட்வொர்க் வரை அனைத்தும் ஒருங்கிணைக்கப்படும். இன்றைய நிலையில், ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ரயில் நெட்வொர்க் போன்று இந்தியா வலுவாக இல்லை. இந்த புதிய வர்த்தக பாதையானது இரண்டு பகுதிகள் இருக்கும். முதலாவது வளைகுடா நாடுகளுடன் இந்தியாவை இணைக்கும் முதல் கிழக்குப் பாதை. இரண்டாவது, வடக்கு காரிடார், வளைகுடா நாடுகளை ஐரோப்பாவுடன் இணைக்கும். ரயில் பாதையுடன் இணைக்கப்படுவதால், மின்சார கேபிள், ஹைட்ரஜன் குழாய், அதிவேக டேட்டா கேபிள் ஆகியவையும் இந்த புதிய வர்த்தக பாதையில் இருக்கும். இந்த வழித்தடத்தில் ரயில் நெட்வொர்க் மட்டுமின்றி, கப்பல் நெட்வொர்க்கும் இருக்கும். இந்தியாவின் மும்பையில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு கடல்வழிப் பாதை இருக்கும்.

அதன் பிறகு, மத்திய கிழக்கு நாடுகள் முழுவதும் ரயில் நெட்வொர்க் தயாராகிவிடும். இந்த ரயில் நெட்வொர்க் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் இருந்து சவுதி அரேபியா, ஜோர்டான், இஸ்ரேல் வரை நீட்டிக்கப்படும். இதற்குப் பிறகு மீண்டும் கடல் வழியாக இரண்டு வழிகள் அமைக்கப்படும். முதல் பாதை இஸ்ரேல் துறைமுகத்தில் இருந்து இத்தாலிக்கு செல்லும். இரண்டாவது பாதை இஸ்ரேலில் இருந்து பிரான்ஸ் வரை செல்லும். இந்த முழு வழித்தடமும் சுமார் ஆறாயிரம் கிலோ மீட்டர் நீளம் கொண்டதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அவற்றில் மூன்றரை ஆயிரம் கிலோ மீட்டர் கடல்வழிப் பாதை இருக்கும்.

புதிய வர்த்தக பாதை அமைப்பது குறித்து அமெரிக்க துணை என்எஸ்ஏ அதிகாரியான ஜான் ஃபைனர் கூறுகையில், 'புதிய வர்த்தக பாதையை அமைப்பதன் மூலம் நாடுகளுக்கு இடையிலான ஆற்றல், டிஜிட்டல் தொடர்பு ஆகியவற்றால் செழிப்பு அதிகரிக்கும். குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் நாடுகளின் வளர்ச்சிக்கு தேவையான உள்கட்டமைப்பை மேம்படுத்தும். மத்திய கிழக்கு நாடுகளில் உறுதியற்ற அரசியல் தன்மை உள்ளதால், அங்கு வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது' என்றார். மேற்கண்ட இந்த வழித்தடத்தின் மூலம், இந்தியாவில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கும், பின்னர் ஐரோப்பாவிற்கும் எளிதாக வணிகம் செய்ய முடியும். அதனால் எரிசக்தி வளங்களின் போக்குவரத்து மற்றும் டிஜிட்டல் இணைப்பை அதிகரிக்க முடியும் என்கின்றனர்.

இந்த வழித்தடத்தின் கட்டுமானத்திற்குப் பிறகு, இந்தியாவில் இருந்து ஐரோப்பாவிற்கு பொருட்களை கொண்டு செல்வதில் 40% நேரம் மிச்சமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக ஜெர்மனிக்கு சரக்குகள் கொண்டு செல்ல ஒரு மாதத்துக்கு மேல் ஆகிறது. புதிய வர்த்தக பாதை அமைக்கப்பட்ட பிறகு, இரண்டு வாரங்களுக்குள் பொருட்கள் சென்றடையும் என்கின்றனர். தற்போது மும்பையில் இருந்து சரக்குகளை ஏற்றிச் செல்லும் கன்டெய்னர்கள், சூயஸ் கால்வாய் வழியாக ஐரோப்பாவை அடைகின்றன. புதிய வர்த்தக பாதை அமைக்கப்பட்ட பிறகு, இந்த கன்டெய்னர்கள் துபாயில் இருந்து இஸ்ரேலில் உள்ள ஹைஃபா துறைமுகத்திற்கு ரயிலில் செல்ல முடியும். இதனால் போக்குவரத்து நேரம், செலவினங்களை மிச்சப்படுத்த முடியும்.

சூயஸ் கால்வாய் ஐரோப்பாவை ஆசியாவையும் இணைக்கிறது. உலகளவில் 7% எண்ணெய் வர்த்தகம் இந்த கால்வாய் வழியாகவே நடைபெறுகிறது. உலக வர்த்தகத்தில் 10% அளவிற்கு சூயஸ் கால்வாய் வழியாகதான் நடக்கிறது. கடந்த 2021 மார்ச் மாதம், சூயஸ் கால்வாயில் பெரிய கப்பல் ஒன்று 6 நாட்களாக சிக்கிக் கொண்டது. இதனால் தினமும் 9 பில்லியன் டாலர் அளவிற்கு இழப்பு ஏற்பட்டது. சூயஸ் கால்வாய் வழியாக தினமும் 50க்கும் மேற்பட்ட கப்பல்கள் செல்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய சூழ்நிலையில், எதிர்காலத்தில் சூயஸ் கால்வாயில் ஏதேனும் கப்பல் சிக்கிக்கொண்டாலோ அல்லது வேறு ஏதேனும் சிக்கல் எழுந்தாலோ, புதிய வர்த்தக பாதை கைகொடுக்கும். இதனால் சர்வதேச வர்த்தகம் பாதிக்கப்படாது.

இத்திட்டத்தின் மூலம் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரிக்கும். உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக இந்தியா மாறும் என்கின்றனர். இந்தியாவின் ஏற்றுமதி பன்மடங்கு அதிகரிக்கும் என்றும், இந்த ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கதாக வர்ணிக்கப்படுகிறது. இந்தியா உள்ளிட்ட நாடுகள் இந்த கனவு திட்டத்தை செயல்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ள நிலையில், சீனாவின் நிலைமை என்னாகும் என்ற கேள்வியும் எழுகிறது. கடந்த 2013ம் ஆண்டு 'ஒரு பெல்ட், ஒரு ரோடு' திட்டத்தை சீனா தொடங்கியது. பின்னர் இத்திட்டத்தை 'பெல்ட் அண்ட் ரோடு' என்று அறிவித்தனர். ஆசிய நாடுகளுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் வரலாற்று ரீதியாக இருந்து வரும் வர்த்தக பாதையை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும் என சொல்லப்படுகிறது.

சீனாவின் இந்த திட்டத்திற்கு இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இத்தாலி பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, டெல்லியில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் பங்கேற்றபோது, சீனப் பிரதமர் லீ கியாங்கை சந்தித்தார். சீனாவின் பல பில்லியன் டாலர் மதிப்பிலான 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டம், இத்தாலிக்கு எதிர்பார்த்த அளவுக்கு நன்மை அளிக்கவில்லை என்று கூறினார். இதன் மூலம் இத்தாலிய அரசாங்கம் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்திலிருந்து வெளியேறுவதற்கான விருப்பத்தை வெளிப்படையாகக் காட்டியிருக்கிறது. இந்தியாவை சுற்றியுள்ள பாகிஸ்தான், இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகளை வளைத்து போடும் சீனாவின் 'பெல்ட் அண்ட் ரோடு' திட்டத்திற்கு மாற்றாக ஜி20 நாடுகளின் புதிய வர்த்தக பாதை திட்டம் இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜி20 மாநாடு நடத்த ₹4,100 கோடி செலவா?



ஜி20 உச்சி மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதாக ஆளும் ஒன்றிய பாஜக அரசு கூறிவரும் நிலையில், இந்த உச்சி மாநாட்டிற்கு ஒன்றிய அரசு செய்த செலவினங்கள் குறித்த சர்ச்சை தற்போது கிளம்பியது. மாநிலங்களவை உறுப்பினரும், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளருமான சாகேத் கோகலே வெளியிட்ட பதிவில், 'ஜி20 உச்சிமாநாட்டிற்காக ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையை விட 300 சதவீதம் அதிகமாக செலவிட்டுள்ளது' என்று கூறியுள்ளார். அதாவது ஜி20 உச்சி மாநாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 990 கோடி ரூபாய்க்கு பதிலாக 4,100 கோடி ரூபாய் அதிகமாக செலவழிக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

முன்னதாக ஜி20 உச்சி மாநாடு தொடர்பாக ஒன்றிய வெளியுறவு மற்றும் கலாசாரத் துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி வெளியிட்ட பதிவில், டெல்லியின் சாலைகள் சீரமைத்தல், தெருவிளக்குகள், அலங்காரம் போன்றவற்றுக்கு ஆகும் செலவுகள் குறித்து தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பதிவில் கொடுக்கப்பட்டுள்ள தொகையை சேர்த்தால், ரூ.4,110.75 கோடி ரூபாய் என்பது தெளிவாகிறது. இந்த தொகையில் 3,600 கோடி ரூபாய் பிரகதி மைதானத்தில் கட்டப்பட்ட இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பு (ஐடிபிஓ) வளாகத்தின் கட்டுமான செலவுக்காக செலவிடப்பட்டுள்ளது. இந்த வளாகத்தை 'பாரத மண்டபம்' என்று பெயரிட்டு, ஜி20 மாநாடு நடத்தப்பட்டது. பாரத மண்டபம் என்பது நிரந்தர உள்கட்டமைப்பு ஆகும்.

எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்வுகளுக்கும் இந்த இடத்தை பயன்படுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டது. நிரந்தர உள்கட்டமைப்பை உருவாக்க செலவிடப்பட்ட தொகையை, ஜி20 உச்சி மாநாட்டிற்கு செலவு செய்ததாக கூறக்கூடாது என்று ஒன்றிய அரசு தரப்பில் கூறப்படுகிறது. இருந்தும் ஜி20 உச்சி மாநாட்டை நடத்தியதற்கான செலவின புள்ளி விபரங்களை ஒன்றிய அரசு இதுவரை வெளியிடவில்லை. ஆனால், இந்த புள்ளிவிபரங்கள் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையை விட குறைவாக செலவிடப்பட்டதாக ஜி20 ஒருங்கிணைப்பாளரான (ஷெர்பா) அமிதாப் காந்த் கூறியுள்ளார்.

10 ஆண்டுக்கு முன் காதலித்து ஏமாற்றியது கொலையில் முடிந்தது

அழுகுக்கலை நிபுணரை தண்ணீர் நிரம்பிய வாளியில் முழ்கடித்து கொன்ற காதலன்

சடலத்தை சூட்கேஷில் அடைத்து 150 கி.மீ சென்று வீசிய கொடூரம்

பைக்கில் மனைவி, குழந்தையையும் அழைத்து சென்றது அம்பலம்

மும்பை, செப். 13- மகாராஷ்டிராவில் காதல் விவகாரத்தில் தனது காதலியை தண்ணீர் நிரம்பிய வாளியில் மூழ்கடித்து கொன்ற காதலன் மற்றும் அவரது மனைவியை போலீசார் கைது செய்தனர். காதலியின் சடலத்தை சூட்கேஷில் அடைத்து 150 கி.மீ சென்று வீசிய கொடூர சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பை நகரின் வசாய் பகுதியை சேர்ந்த கிராஃபிக் டிசைனர் மனோகர் சுக்லா (34), தனது மனைவி பூர்ணமாவுடன் வசித்து வருகிறார். கடந்த 2013ம் ஆண்டு அதே பகுதியில் நைனா மஹத் (28) என்ற பெண்ணின் குடும்பத்தினர் வசித்து வந்தனர். அப்போது மனோகருக்கும், மஹத்துக்கும் காதல் ஏற்பட்டது. இருவரும் வெளியே ஜாலியாக சுற்றித் திரிந்தனர். இதற்கிடையே 2018ல் மனோகர் சுக்லாவுக்கும், பூர்ணிமாவுக்கும் வீட்டில் உள்ள பெரியவர்கள் ஏற்பாட்டின்படி திருமணம் நடந்தது. இருந்தும் நைனா மஹத்துடன் மனோகர் சுக்லாவுக்கு தொடர்பு இருந்தது. இவ்விவகாரம் அவரது மனைவி பூர்ணிமாவுக்கு 2019ல் தெரியவந்தது. இதனால் குடும்பத்தில் கணவன் - மனைவிக்குள் அடிக்கடி பிரச்னை ஏற்பட்டு வந்தது.

ஒருகட்டத்தில் நைனா மஹத்திடம் இருந்த தொடர்பை மனோகர் துண்டித்துக் கொண்டார். நிலைமை இவ்வாறு இருக்க, அழுகுக்கலை நிபுணரான நைனா மஹத்தை காணவில்லை என்று, கடந்த ஒரு மாதத்திற்கு முன் அவரது சகோதரி போலீசில் புகார் அளித்தார். போலீசாரும் வழக்கு பதிந்து நைனா மஹத்தை பல இடங்களில் தேடிப்பார்த்தனர். நைனா மஹத்தின் கடந்த கால வாழ்க்கை குறித்து விசாரித்த போது, அந்தப் பெண்ணின் கள்ளக்காதலனான மனோகர் சுக்லா

நைனா மஹத், மனோகர் சுக்லா (உள்படம்), சூட்கேஷுடன் தம்பதி மற்றும் குழந்தை.

குறித்து போலீசாருக்கு தெரியவந்தது. அதையடுத்து மனோகர் சுக்லாவை தேடிப் பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர்.

இதுகுறித்து போலீஸ் அதிகாரிகள் கூறுகையில், 'சன்டெக் வளாகத்தில் தனியாக தங்கியிருந்த நைனா மஹத்தை, மனோகர் சுக்லா அடிக்கடி சந்தித்து வந்துள்ளார். இருவருக்கும் கள்ளத் தொடர்பு தொடர்ந்து இருந்துள்ளது. இவர்களது தகாத உறவால் நைனா மஹத்தின் குடும்பத்தினர், அவரை தங்களது குடும்பத்தில் இருந்து ஒதுக்கி வைத்து விட்டனர். இந்த நிலையில் கடந்த ஆகஸ்ட் 9ம் தேதி நைனா மஹத்தின் வீட்டிற்கு மனோகர் சுக்லா சென்றார். இருவரும் வழக்கம் போல் ஜாலியாக இருந்துள்ளனர். பின்னர் அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டுள்ளது. தன்னை காதலித்து ஏமாற்றி விட்டதாகவும், அதனால், தான் பூச்சிக் கொல்லி மருந்தை குடித்து தற்கொலை செய்து கொள்ள உள்ளதாகவும் நைனா மஹத் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மனோகர் சுக்லா, கள்ளக்காதலி நைனா மஹத்தின் தலைமுடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு குளியலறைக்கு சென்றுள்ளார். அங்கு தண்ணீர் நிரம்பிய வாளியில், நைனா மஹத்தின் தலையை மூழ்கடித்து கொன்றார். பின்னர் சடலத்தை கட்டிலில் அமரவைத்துவிட்டு கிளம்பினார். அன்றிரவு தனது மனைவி மற்றும் 2 வயது மகளுடன் நைனா மஹத்தின் வீட்டிற்கு மனோகர் சுக்லா சென்றார். வீட்டில் இருந்த நைனா மஹத்தின் சடலத்தை பிளாஸ்டிக் கவரில் போட்டு, சூட்கேஷில் அடைத்து வெளியே தூக்கி வந்தனர். பின்னர் தனது ஸ்கூட்டரில் சடலத்தின் சூட்கேஷை தூக்கி வைத்துக் கொண்டு, மனைவி, மகளுடன் கிளம்பிச் சென்றார்.

சுமார் 150 கிலோமீட்டர் பயணம் செய்து, குஜராத் மாநிலம் வல்சாத் என்ற இடத்தின் சிற்றோடை அருகே நைனா மஹத்தின் அடைத்து வைக்கப்பட்ட சடலத்தின் சூட்கேஷை வீசி எறிந்துவிட்டு திரும்பினர். இந்த சம்பவம் நடந்த போது அவரது மனைவி, மகளும் உடன் இருந்தனர். குஜராத் மற்றும் மகாராஷ்டிரா போலீசாரின் கூட்டு முயற்சியால் சூட்கேஷில் அடைத்து வீசப்பட்டது நைனா மஹத்தின் உடல் தான் என்பது உறுதி செய்யப்பட்டது. நைனா மஹத்தின் கையில் பச்சை குத்தி இருந்ததால், அது முக்கிய ஆதாரமாக இருந்தது.

இருந்தும் அறிவியல் பூர்வமான ஆதாரங்களை சேகரிக்க உள்ளதால், கைப்பற்றப்பட்ட சடலத்தின் டிஎன்ஏ மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. நைனா மஹத்தை கொன்று வீசியதை தம்பதிகள் ஒத்துக் கொண்டனர். அதற்கு சிசிடிவி கேமரா பதிவுகள் ஆதாரமாக உள்ளன. அதனால் இருவரும் கைது செய்யப்பட்டனர். ஏற்கனவே கடந்த 2019ல் மனோகர் சுக்லா மீது நைனா மஹத் பாலியல் புகார் கொடுத்திருந்தார். சமீபத்தில் அவரை வீடு புகுந்து தாக்கியதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம்' என்றனர்.

ராஜஸ்தானில் அதிகாலை சோகம்

பஸ் மீது லாரி மோதி 11 பேர் பலி

பரத்பூர், செப். 13- குஜராத் மாநிலத்தில் இருந்து உத்தரபிரதேச மாநிலம் மதுராவை நோக்கி தனியார் பயணிகள் பேருந்து சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்து ஜெய்ப்பூர் - ஆக்ரா நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது, நாட்பாய் அடுத்த ஹந்தாரா பாலத்தில் பழுது டைந்து நின்றது. பேருந்தை ஓரமாக நிறுத்தி, அதன் டிரைவர் பழுது பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது பின்னால் வந்த லாரி எதிர்பாராத விதமாக பேருந்து மீது மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சம்பவ

இடத்திலேயே 11 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 20 பேர் அருகில் இருந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து போலீசார் கூறுகையில், 'இன்று அதிகாலை 5 மணியளவில் நடந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் ஆறு பேர் பெண்கள் மற்றும் ஐந்து பேர் ஆண்கள். படுகாயமடைந்த 20 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்' என்றனர்.

ஸ்ரீராம் நிதி லிமிடெட்

SHRIRAM Finance
SHRIRAM City MONEY WHEN YOU NEED IT MOST

தலைமை அலுவலகம்: லெவல்–3, வொக்கார்ட் டவர்ஸ், ஈஸ்ட் விங் சி–2 பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051; தொலைபேசி: 022 4241 0400, 022 4060 3100; இணையதளம்: http://www.shriramfinance.in
பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், பிளாட் எண்.14A, சவுத் பேஸ் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை 600 032.
கிளை அலுவலகம்: எண் 13, மீனாட்சி டவர்ஸ், ராஜமன்னார் தெரு, ஜிஎன் செட்டி சாலை, தி நகர், சென்னை–600 017.

பிற்சேர்க்கை-IV-A [விதி 8(5) & 9(6) விதிமுறையை காண்க] அசையாச் சொத்துகள் விற்பனைக்கான ஒல அறிவிப்பு

குறிப்பு: சென்னை, NCLT ஆணையின்படி "ஸ்ரீராம் சிட்டி யூனியன் நிதி லிமிடெட்" ஆனது "ஸ்ரீராம் போக்குவரத்து நிதி லிமிடெட்" உடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து "ஸ்ரீராம் போக்குவரத்து நிதி லிமிடெட்" பெயரானது 30–11–2022 தேதியிட்ட பெயர் மாற்றம் தொடர்பான கூட்டிணைப்பு சான்றிதழ் மூலம் 30.11.2022 முதல் "ஸ்ரீராம் நிதி லிமிடெட்" ஆக மாற்றப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது ஸ்ரீராம் நிதி லிமிடெட் வசம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஸ்ரீராம் நிதி லிமிடெடின் (முன்னதாக ஸ்ரீராம் சிட்டி யூனியன் நிதி லிமிடெட் ஆக அறியப்பட்டது) அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும், கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகள் ஆனது, அட்டவணையில் குறிப்பிட்டவாறு, கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் வசமிருந்து ஸ்ரீராம் நிதி லிமிடெடுக்குரிய பாக்கி நிலுவைத்தொகையை மீட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 29/09/2023 அன்று காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணிக்குள் மின்–ஏலத்தில்** விற்பனை செய்யப்படவுள்ளது. கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள், நிலுவைத்தொகை, அசையாச் சொத்தின் குறு விவரம் மற்றும் அதற்குரிய தெரிந்த வில்லங்கங்கள், சுவாதீனம் வகை, நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை மேலும் உயர்த்தும் தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்/உப–கடன்தாரர்கள் ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர்	13(2) கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	சொத்து விவரம்	நிர்ணய விலை (₹) & ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை செலுத்தும் விவரங்கள் (EMD) விவரங்கள்.	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் மற்றும் பார்வையிடும் நாள்
1.செல்வி. ஜி கே வெஜ் உணவகத்தின் பிரதிநிதி அதன் பார்ட்னர் திரு.வேலுச்சாமி கருங்கரன் எண்.3, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், காஞ்சிபுரம், சென்னை–600 047 2. M/s. ஜி கே கேட்டரிங் சர்வீஸ், அதன் உரிமையாளர் கே.குணசேகரன் எண்.3, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், காஞ்சிபுரம், சென்னை–600 047 3. வேலுச்சாமி கருணாகரன் எண்.20, ராஜ ராஜேஸ்வரி நகர், சிட்லபாக்கம், சென்னை–600 064 4. திரு. கே குணசேகரன் எண்.7 5வது குறுக்குத் தெரு, சீனிவாச நகர், சிட்லபாக்கம், சென்னை–600 064 **சுவாதீனம் நாள் & சுவாதீனம் வகை** 17 –04–2019 அடையாளப்பூர்வ சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** **தெரிந்தது இல்லை**	அறிவிப்பு தேதி: 05–02–2019 ரூ. 4,18,89,007/– (ரூபாய் நான்கு கோடி பதினெட்டு லட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து ஏழு மட்டும்) கூடுதல் வட்டி மற்றும் பிற ஒப்பந்தம் மற்றும் அபராதங்களுடன் பிப்ரவரி 05, 2019 வரை கடன் கணக்கு எண்: RSTNGTF17042 90001 12–09–2023 அன்று முன்மூடல் தொகை ரூ. 96081062/– (ரூபாய் ஒன்பது கோடி அறுபத்து லட்சத்து எண்பத்தி ஆயிரத்து அறுபத்து இரண்டு மட்டும்)	பழைய எஸ். எண்ணில் உள்ள நிலத்தின் துண்டு மற்றும் பார்சல் அனைத்தும். 16, புதிய எஸ். எண். 16/2 சிந்தலக்குப்பம் கிராமத்தில் 2 ஏக்கர் பரப்பளவு, கும்மிடிப்பூண்டி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் எல்லையில்: வடக்கு: ச.எண். 17, 16/1 மற்றும் கிருஷ்டையா நிலம், தெற்கே: ச.எண். 26 & 32, பத்திரி முதியாலய்யா நிலம் மற்றும் பொதுவான பாதை, கிழக்கு மூலம்: ச.எண். 15, செங்கல்வராயன் நிலம், மேற்கு மூலம்: எஸ். எண். 24 & 25. கும்மிடிப்பூண்டி துணைப் பதிவு மாவட்டத்திலும், சென்னை பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது. வடக்கு.	ரூ. 1,45,00,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தைந்து லட்சம் மட்டும்) ஏல உயர்வு: ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அத்தகைய மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (₹)** ரூ. 14,50,000/– (ரூபாய் பதினான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) EMD ஐ சமர்ப்பிப் பதற்கான கடைசி தேதி: 27 செப்டம்பர், 2023 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை	EMD தொகை இருக்க வேண்டும் மூலம் டெபாசிட் செய்யப்பட்டது RTGS NEFT க்கு கணக்கு விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது ஸ்ரீராம் ஃபைனான்ஸ் லிமிடெட்டுக்கு ஆதரவாக வங்கி பெயர் AXIS வங்கி லிமிடெட் கிளை–DR ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை வங்கி கணக்கு எண்– நடப்புக் கணக்கு எண் 006010200067449 IFSC குறியீடு– UTIB0000006	29 ஆம் தேதி செப். 2023 நேரம்: காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	திரு. எஸ் மேத்யூ அருண் +919994098638 திரு.ஜீவரத்னா எம்.ஆர் +919841568770 திரு.தேப்ஜோதி ராய் 98747 02021 சொத்து ஆய்வு தேதி: –23 செப்டம்பர், 2023 நேரம் காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை.

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஸ்ரீராம் நிதி லிமிடெட் இணையதளத்தில் கொடுக்கப்பட்ட http://www.shriramfinance.in/auction படிக்கவும்.

இடம்: சென்னை
நாள்: 13–09–2023

ஒம்/– அதிகாரப்பூர்வ அதிகாரி
ஸ்ரீராம் நிதி லிமிடெட்